இப்பாடநூலானது, அன்றாட வாழ்க்கையுடன் அறிவியலைத் தொடர்புபடுத்தி, மகிழ்வுடன் பொருளுணர்ந்து கற்பதை இலக்காகக் கொண்டுள்ளது. மேலும், குழந்தைகளின் விழுமியங்களையும் திறன்களையும் வளர்க்க வாய்ப்பளிப்பதன் மூலம் அவர்களின் முழுமையான வளர்ச்சிக்கு உதவுகிறது. இது, குழந்தைகளை ஆர்வமுள்ள கற்போராகவும் பொறுப்புள்ள சமூக உறுப்பினராகவும் வளர்த்தெடுக்க உறுதுணை புரிகிறது.

பொருளடக்கம்

அலகு - 1
நமது பசுமை நண்பர்கள்



69

அலகு - 2
ஜீனியின் தோட்டம்

92



YY1IT மின்னூல்

YT6EP உள்ளடங்கிய நூல்

LA1GM ஆசிரியர் கையேடு

DG8CH மதிப்பீடு

1 நமது பசுமை நண்பர்கள்

எங்கெங்கும் தாவரங்கள்!

ZB2KQ

உற்றுநோக்கிக் கலந்துரையாடுவோம்

நாம் தாவரங்களை எங்கெல்லாம் காணலாம்?

மதுவும் முகிலும் தங்கள் வீட்டின் முன்னே பூனைக்குட்டியுடன் விளையாடிக் கொண்டிருந்தனர். பூனைக்குட்டி திடீரென குதித்து எங்கேயோ ஓடிவிடுகிறது. இருவரும் பூனைக்குட்டியைத் தேடிச் செல்கின்றனர். அவர்கள் செல்லும் இடமெல்லாம் தாவரங்களைக் காண்கின்றனர்.

சாலை ஓரத்தில் உள்ள தாவரங்கள் பார்ப்பதற்கு அழகாக இருக்கின்றன.



எங்கே என் பூனைக்குட்டி?

குளத்தில் உள்ள தாவரங்கள் அழகாக மிதக்கின்றன.



எங்கே என் பூனைக்குட்டி?

வயலில் உள்ள தாவரங்கள் நாள்தோறும் வளர்கின்றன.



பூனைக்குட்டி இங்கேயும் இல்லையே!

தோட்டத்தில் உள்ள தாவரங்கள் வண்ணமயமாகக் காட்சியளிக்கின்றன.



எங்கே என் பூனைக்குட்டி?

இங்கே பார், ஏதோ இருக்கிறதே?
நம் பூனைக்குட்டியா? ஆம் இதுதான்!



நம்மைச்சுற்றிப் பல்வேறு இடங்களில் தாவரங்கள் வளர்கின்றன.

ஆசிரியர் கையேடு

குழந்தைகள் படங்களை உற்றுநோக்கித் தங்கள் அன்றாட வாழ்வில் தாவரங்களை எங்கெல்லாம் பார்த்திருக்கிறார்கள் என்பது குறித்துக் கலந்துரையாட ஊக்குவிக்கவும்.

செயல்பாட்டு நேரம்

ஆசிரியருடன் உங்கள் பள்ளியைச் சுற்றி வரும்போது நீங்கள் பார்த்த தாவரங்கள் உள்ள இடங்களை (✓) குறியிடுக.



தோட்டத்தில்



நுழைவு வாயிலின் அருகில்




வேலி ஓரத்தில்



விளையாட்டு மைதானத்தைச் சுற்றி



வகுப்பறையில்



தொட்டியில்




சாலையோரத்தில்




தாவரங்கள் சில நீரிலும் சில நிலத்திலும் வளர்கின்றன.


செய்து கற்போம்

1. ஒவ்வொரு தாவரத்திற்கும் கீழேயுள்ள பகுதியை வண்ணமிடுக. நீரில் வளர்பவைக்கு வண்ணமும் நிலத்தில் வளர்பவைக்கு வண்ணமும் இடுக.









2. நிலத்தில் வளரும் தாவரத்திற்கு வண்ணமிடுக.



உற்றுநோக்கிக் கலந்துரையாடுவோம்

மண் நிரப்பிய ஒரு தொட்டியில் உள்ள மணித்தாவரத்தையும் ஒளி ஊடுருவும் குவளை நீரிலுள்ள மணித்தாவரத்தையும் இரு வாரங்களுக்கு உற்றுநோக்கவும்.

அ. இரண்டு வாரங்களுக்குப் பிறகு எந்தத் தாவரம் ஆரோக்கியமாக இருக்கும்/வளர்ந்திருக்கும்? உங்கள் ஊகத்திற்கு (✓) குறியிடுக.

தாவரம் (அ) ◯ தாவரம் (ஆ) ◯

ஆ. இரண்டு வாரங்களுக்குப் பிறகு எந்தத் தாவரம் பார்ப்பதற்கு ஆரோக்கியமாக / நன்றாக வளர்ந்திருந்தது? (✓) குறியிடுக.





தாவரம் (அ)



தாவரம் (ஆ)

தாவரம் (அ) ◯ தாவரம் (ஆ) ◯

நீங்கள் ஊகித்தது சரியா?

ஆம் ◯ இல்லை ◯

சில தாவரங்கள் மண்ணிலும் நீரிலும் நன்றாகவும் ஆரோக்கியமாகவும் வளரும்.

தாவரங்களும் அவற்றின் பாகங்களும்


ஒரு தாவரம் வாழ்வதற்கும் வளர்வதற்கும் அதன் ஒவ்வொரு பாகமும் எவ்வாறு உதவுகிறது?

உற்றுநோக்கிக் கலந்துரையாடுவோம்



மது, முகில், பூனைக்குட்டி மூவரும் பாட்டியின் வீட்டிற்கு வந்தனர். விளையாடும்பொழுது, பூனைக்குட்டி ஒரு சிறு செடியை, வேருடன் பிடுங்கியது. குழந்தைகள் சத்தமிட்டனர்.





மியாவ்! இது என்ன நீளமான குச்சி?

இது தான் தண்டு.

தண்டு தான் தாவரத்தின் அனைத்துப் பாகங்களுக்கும் நீரையும் உணவுப் பொருளையும் எடுத்துச் செல்கிறது.

இலைகளே தாவரத்திற்கான உணவைத் தயாரிக்கின்றன.

மியாவ்! பச்சை நிறத்திலுள்ளவை எவை?

இவை, இலைகள்

இவை மலர்கள். இவை வளர்ந்து கனிகளாக மாறுகின்றன.

மியாவ்! வண்ணமயமாக இருப்பவை எவை?

பழங்கள் விதைகளைப் பாதுகாக்கின்றன. விதைகள் புதிய தாவரங்களாக வளர்கின்றன.

இவை தான் பழங்கள்.

மியாவ்! இங்கே தொங்கிக் கொண்டு இருப்பவை என்ன?




ஆசிரியர் கையேடு

ஒவ்வொரு குழுவிற்கும் இயன்றால் ஒரு சிறிய செடியைக் கொடுக்கவும். உரையாடல்களைக் குரல் மாற்றி வாசிக்கவும். உரையாடலின்போதே குழந்தைகளை அந்தச் செடியின் பாகத்தை உற்றுநோக்கி, தொட்டுப் பார்த்து, அடையாளம் கண்டு அதன் பெயரைக் கூறச் சொல்லவும். பின்னர், அவற்றின் செயல்பாடுகள் குறித்துக் கலந்துரையாடவும்.




செய்து கற்போம்

1. தக்காளிச் செடியின் விடுபட்ட பாதியை வரைந்து வண்ணமிடுக.





2. வண்ணமிடப்படாத தாவர பாகங்களுக்கு வண்ணமிட்டு அவற்றின் பெயர்களை எழுதுக.

இலைகள், தண்டு, பூக்கள், பழங்கள், வேர்கள்

....

....

3. கரும்பின் படத்தை வரைந்து வண்ணமிடுக.



தண்டு







உங்களுக்குத் தெரியுமா?
இவையே கரும்பின் வெண்மை நிற மலர்கள். கரும்பை "இனிப்புப் புல்" என்கிறோம்.



4. தாவரங்களை அவற்றின் மலர்கள், பழங்களுடன் இணைத்து வண்ணமிடுக.

















தாவரங்கள் பலவிதம்

உற்றுநோக்கிக் கலந்துரையாடுவோம்





EL9MJ



உற்றுநோக்கிச் சரியான விடையை (✓) செய்க.

1. மிகப்பெரிய தாவரம் எது ?

   ◯ புதினா ◯ மல்லிகை ◯ மாமரம்

2. கடினமான தண்டுடைய தாவரம் எது?

   ◯ மாமரம் ◯ மல்லிகை ◯ புதினா

3. சிறிய தாவரம் எது?

   ◯ மாமரம் ◯ புதினா ◯ மல்லிகை


4. புதினா இலைகள்

   ◯ மென்மை ◯ கடினம் ◯ சொரசொரப்பானது



செயல்பாட்டு நேரம்

அனைத்துத் தாவரங்களும் ஒரே மாதிரியாக இருக்கின்றனவா?



மேலே உள்ள படத்தை உற்றுநோக்கி, சரியான எண்ணை எழுதுக.

சிறிய தாவரம் ☐ நடுத்தரமான தாவரம் ☐

பெரிய தாவரம் ☐ தடிமனான தண்டு ☐ மெல்லிய தண்டு ☐

ஆசிரியர் கையேடு

பள்ளி வளாகத்திலுள்ள தாவரங்களை உற்றுநோக்க, ஆசிரியர் குழந்தைகளை அழைத்துச் செல்லவும். தாவரங்களின் உயரத்தை ஒப்பிடச் செய்யவும். மென்மையான/ கடினமான, மெல்லிய/ தடிமனான மற்றும் தண்டுகளை உற்றுநோக்கிப் புதிய, பழைய, காய்ந்த மற்றும் உதிர்ந்த இலைகளை அடையாளம் காணச் செய்யவும். உற்று நோக்கியவற்றை ஒப்பிட்டு, கலந்துரையாட ஊக்குவிக்கவும்.

செய்து கற்போம்

1. **அளந்து ஒப்பிடுவோம்:** குழந்தைகளைக் குழுக்களாகப் பிரிக்கவும். ஒவ்வொரு குழுவிற்கும் ஒரு கீரைச் செடியைக் கொடுக்கவும். அழிப்பானைப் பயன்படுத்திச் செடியின் பாகங்களை அளந்து அட்டவணையில் பதிவு செய்யவும்.



உற்றுநோக்குதல்	அழிப்பான்களின் எண்ணிக்கை
வேரின் நீளம்	
தண்டின் நீளம்	
இலையின் நீளம்	

கலந்துரையாடுக: அழிப்பானைப் பயன்படுத்தி நீங்கள் அளவிட்டதை உங்கள் நண்பர்களின் அளவீட்டுடன் ஒப்பிடுங்கள். அனைத்துத் தாவரங்களுக்கும் அவை ஒரே அளவில் உள்ளனவா?

ஒரு தண்டில் உள்ள இலைகளின் எண்ணிக்கை _____

உனது தாவரத்தில் உள்ள நீளமான பாகத்தினை (✓) குறியிடுக.

1. வேர் ◯ 2. தண்டு ◯
3. இலை ◯

அனைத்துத் தாவரங்களிலும் வேர்கள், தண்டுகள், இலைகள் உள்ளன. ஆனால், அவை நிறம், வடிவம், அளவில் வேறுபடுகின்றன.

இலைகளுக்கும் மலர்களுக்கும் நீர் எப்படிச் செல்கிறது?

2. கண்டுபிடிப்போம்!

தேவையான பொருள்கள்: நெகிழி/கண்ணாடிக் குவளை, தண்ணீர், ஒவ்வொரு குழந்தைக்கும் ஓர் உறிஞ்சுகுழல்



நீர் நிரம்பிய கண்ணாடிக் குவளையை எடுத்துக் கொள்ளவும்.



உறிஞ்சுகுழலின் ஒரு முனையை நீரினுள் வைக்கவும்.



உறிஞ்சுகுழலின் வழியாக நீரை உறிஞ்சி அதை உற்றுநோக்கவும்.

அ. உறிஞ்சுகுழல் வழியாக நீர் கீழிருந்து மேலே வருகிறதா? ஆம்/இல்லை

ஆ. உறிஞ்சுகுழல் தாவரத்தண்டினை ஒத்துள்ளதா? ஒப்பிட்டுக் கலந்துரையாடுக.

தாவரத்தின் தண்டு, இலைகளுக்கும்
மலர்களுக்கும் நீரை எடுத்துச் செல்கிறது.


ஆசிரியர் கையேடு


ஒவ்வொரு குழந்தைக்கும் சுத்தமான உறிஞ்சுகுழலைக் கொடுக்கவும். பகிர்ந்து பயன்படுத்த அனுமதிக்கக் கூடாது. உறிஞ்சுகுழலில் தண்ணீர் மேலேறுவதைத் தாவரத் தண்டு நீரை எடுத்துச் செல்வதுடன் தொடர்புபடுத்தி உற்றுநோக்கக் குழந்தைகளுக்கு உதவவும்.

உற்றுநோக்கிக் கலந்துரையாடுவோம்

தாவரங்களை எவ்வாறு அடையாளம் காண்பீர்கள்?

3 (அ) இவை என்ன தாவரங்கள்? அவற்றின் பெயர்களை எழுதுக.
(மிளகாய் / தக்காளி)





தாவரங்களை அவற்றின் பாகங்களின் மூலம் அடையாளம் காணலாம்.

(ஆ) தாவரத்தின் எந்த பாகம் தாவரத்தை அடையாளம் காண முதலில் உங்களுக்கு உதவியது? (✓) செய்க.

○ பழங்கள் ○ இலைகள் ○ தண்டு ○ மலர்கள்

(இ) தக்காளி, மிளகாய் பழங்களை வரைக.

தக்காளி	மிளகாய்

கலந்துரையாடுவோம்: அனைத்துப் பழங்களும் ஒரே அளவு மற்றும் நிறத்தில் உள்ளனவா?

ஆசிரியர் கையேடு

தக்காளி அல்லது மிளகாய்ச் செடியை நேரடியாகக் காண்பிக்கவும். குழந்தைகளை அவற்றை உற்றுநோக்கி, ஒப்பிடச் செய்து, எவ்வாறு அவர்கள் அதனைக் கண்டறிந்தனர் என்பதைக் குறித்துக் கலந்துரையாடவும்.


உணவாகப் பயன்படும் தாவரங்கள்

உற்றுநோக்கிக் கலந்துரையாடுவோம்

JG2NL

தாவரத்தின் வெவ்வேறு பாகங்களைப் பயன்படுத்தி உணவு தயாரிக்க முடியுமா?

அனைவரும் வாருங்கள். நமது உணவிற்காக வெவ்வேறு காய்களைச் சேகரிப்போம்.



நிலத்துக்குக் கீழே வளர்பவை	நிலத்துக்கு மேலே வளர்பவை			
 கேரட்  உருளைக்கிழங்கு	 கொத்த மல்லி  கறிவேப்பிலை  முட்டைக்கோஸ்	 வாழைப்பூ  காலிஃபிளவர்	 தக்காளி	

சில காய்கறிகள் நிலத்துக்குக் கீழே வளர்கின்றன. சில நிலத்துக்கு மேலே வளர்கின்றன.

செய்து கற்போம்

1. நிலத்துக்குக் கீழே வளரும் ஒரு காயையும் நிலத்துக்கு மேலே வளரும் ஒரு காயையும் வரைந்து பெயரை எழுதுக.

நிலத்துக்குக் கீழே வளரும் காய்	நிலத்துக்கு மேலே வளரும் காய்

உங்கள் தட்டில் உள்ள உணவைப் பாருங்கள். எத்தனை உணவுகள் தாவரங்களிலிருந்து பெறப்பட்டவை?

_____




2. நமது உணவில் பயன்படும் இலைகளையும் மலர்களையும் கண்டறிந்து வண்ணமிடுக.




புதினா



காலிஃபிளவர்



தக்காளி



வாழைப்பூ


3. பொருந்தாததை (✓) செய்க. உங்களின் தெரிவை உங்களின் நண்பருடன் கலந்துரையாடுக.

அ)








ஆ)






இ)






4. செயல்திட்டம்.

கடந்த 3 முதல் 4 நாள்களில் நீங்கள் சாப்பிட்ட காய்கறிகளை நினைத்துப் பார்க்கவும். பெரியவர்களின் உதவியுடன் அவற்றின் பெயர்களை எழுதி அவற்றை வகைப்படுத்துக.

நிலத்துக்குக் கீழே வளரும் காய்கறிகள் _____


நிலத்துக்கு மேலே வளரும் காய்கறிகள் _____

இலைகள் _____ மலர்கள் _____

தாவரங்களைப் பாதுகாப்போம்

உற்றுநோக்கிக் கலந்துரையாடுவோம்

தாவரங்கள் ஆரோக்கியமாக இருக்கத் தேவையானவை எவை ?



நம்மைச் சுற்றியுள்ள தாவரங்களைப் பராமரிக்க வேண்டும்.

செய்து கற்போம்

1. தாவரங்களைப் பராமரித்தலில் சரியான செயல்களுக்கு (✓) குறியிடுக.



தாவரத்திற்கு நீரூற்றுதல் ☐



தாவரத்தை மிதித்தல் ☐



மலர்களைப் பறித்தல் ☐



தாவரத்தைச் சுற்றிலும் வேலி அமைத்தல் ☐



கிளைகளை முறித்தல் ☐



தாவரத்தைச் சுற்றிலும் கழிவுகளை எறிதல் ☐

2. புள்ளிக்கோடுகளை இணைத்து வண்ணமிடுக.



3. ஒரு வெள்ளைத்தாளில் மரப்பட்டை மற்றும் இலையின் மீது தேய்த்து அச்செடுக்க.







உலகின் மிகப்பெரிய, திடமான இலைகளில் ஒன்று விக்டோரியா நீர் அல்லி.

4. ஒரு வெள்ளைத்தாளில் உங்களுக்குப் பிடித்த ஒரு தாவரத்தை வரைந்து வண்ணம் தீட்டி, பாகங்களைக் குறிக்க.



மலர்கள்


மலர்கள் நம்மை ஏன் மகிழ்ச்சியாக உணரச் செய்கின்றன?

செயல்பாட்டு நேரம்

1. பூங்கொத்துத் தயாரிப்போம்

மது ஒரு சிறிய பூங்கொத்தைத் தயாரித்து, தனது பாட்டிக்குக் கொடுத்தாள்.

1. இலையின் அடிப்பகுதியிலிருந்து நடுப்பகுதி வரை இரு பக்கங்களிலும் சிறிதளவு கிழிக்கவும்.
2. இலையின் ஒரு பக்கத்தை உட்புறமாக மடக்கவும்.
3. மற்றொரு பக்கத்தையும் உட்புறமாக மடக்கவும்.
4. இலையின் முனைகளை ஒரு சிறிய குச்சியைக் கொண்டு ஒன்றாகச் சேர்க்கவும். அதன் உள்ளே இரண்டு பூக்களை வைத்துப் பூங்கொத்தைத் தயாரிக்கவும்.





இப்போது, உங்கள் சுற்றுப்புறத்தில் உள்ள பூக்களையும் இலைகளையும் பயன்படுத்தி, ஒரு பூங்கொத்து தயாரித்து உங்களுக்குப் பிடித்த ஒருவருக்குப் பரிசாகக் கொடுங்கள்.

ஆசிரியர் கையேடு

கிடைக்கும் பூக்களைப் பயன்படுத்தி, குழந்தைகள் பூங்கொத்து செய்ய ஆசிரியர் உதவவும்.

2. மலர்களின் மணத்தை நுகர்ந்து அவற்றின் பெயர்களைக் கண்டுபிடிக்க.





மலர்கள் நம் சுற்றுப்புறத்தை வண்ணமயமாகவும் நறுமணமிக்கதாகவும் மாற்றுகின்றன.

ஆசிரியர் கையேடு

உள்ளூரில் எளிதாகக் கிடைக்கும் நறுமணமிக்க புத்தம்புது மலர்களைச் சேகரிக்கவும். ஒவ்வொரு முறையும் ஒரு மலரை மட்டும் சிறு துணிப்பைக்குள் வைத்து, ஒவ்வொரு குழந்தையும் அதன் மணத்தை நுகர்ந்து தங்களது கருத்தைப் பகிர்ந்த பின்னர் அந்த மலரின் பெயரைக் கூறச் செய்யவும்.

3. உங்கள் வகுப்பில் ஒரு பூக்கோலம் இடுக.

1 கவனியுங்கள்

மலர்களை உற்றுப் பாருங்கள்.



2 குழுவாகப் பிரியுங்கள்

ஒரே வகையான மலர்களை ஒன்றாகச் சேர்த்து வையுங்கள்.



3 முடிவு செய்யுங்கள்

ஒவ்வொரு மலரையும் பூக்கோலத்தில் எங்கு வைக்க வேண்டும் என்று முடிவு செய்யுங்கள்.



4 உருவாக்குங்கள்


அனைவரும் சேர்ந்து அழகான ஒரு பூக்கோலத்தை உருவாக்குங்கள்.





உருவாக்கிய பூக்கோலத்தைக் காண்பித்து, ஒரு கருத்தைப் பகிருங்கள்.

4. மலரின் இதழ்களை எண்ணி எழுதுக.



அ. அனைத்து மலர்களுக்கும் ஒரே எண்ணிக்கையிலான இதழ்கள் இருக்குமா?

ஆம் ☐ இல்லை ☐

ஆ. உங்கள் விடைகளை உங்கள் நண்பரின் விடைகளுடன் ஒப்பிட்டுப் பாருங்கள்.

வெவ்வேறு மலர்களுக்கு வெவ்வேறு எண்ணிக்கையிலான இதழ்கள் இருக்கும்.

ஆசிரியர் கைபேடு

வகுப்பறைக்கு, பல்வேறு வகையான மலர்களைக் கொண்டு வரவும். ஒவ்வொரு குழந்தையும் ஒவ்வொரு மலரின் இதழ்களின் எண்ணிக்கையை நண்பர்களுடன் ஒப்பிட்டுப் பார்க்க ஊக்குவிக்கவும்.

உற்றுநோக்கிக் கலந்துரையாடுவோம்

அனைத்து மலர்களும் ஒரே மாதிரியானவையா?


மல்லிகை


சாமந்தி


ரோஜா


பவழமல்லி


செண்பகப்பூ

இவை நறுமணம் மிக்கவை.


வாடாமல்லி



சின்னஞ்சிறு
சிட்டுக்குருவியே,
பூந்தோட்டம் போய் வா நீ!
எந்தப்பூவைப் பறித்து வந்தாய்?
மல்லிகைப் பூவைப் பறித்து வந்தேன்...


இட்லிப்பூ


சங்குப்பூ


நித்தியகல்யாணி


கனகாம்பரம்

மலர்கள் பல்வேறு நிறங்களில் காணப்படுகின்றன. சில மலர்கள் இனிய மணம் (நறுமணம்) உடையவை. சில பூக்கள் கொத்தாகப் பூக்கும். சில பூக்கள் தனித்தனியாகப் பூக்கும்.



முடிந்தவரை பலவகையான மலர்களை வகுப்பறைக்குக் கொண்டு வரவும். மலர்களின் பெயர்களை மாற்றி மாற்றிப் பயன்படுத்தி, குழந்தைகளுக்குப் பாடலை முழுமையாக்க உதவவும்.

செய்து கற்போம்

WS4GF

1. சரியான பூவை (✓) செய்க.

அ. கொத்தாகப் பூக்கும் பூக்கள்:





ஆ. நறுமணமிக்க இரண்டு பூக்கள்:





இ. உங்களுக்கு மிகவும் பிடித்த பூ _____.

நமது அன்றாட வாழ்வில் பூக்களை எங்கெல்லாம் பயன்படுத்துகிறோம்?

2. நீங்கள் ஒவ்வொரு பூவும் பயன்படுத்தப்படுவதைப் பார்த்த இடங்களில் 🙂 வரைக.

நாம் பூக்களைப் பயன்படுத்தும் இடங்கள்	1 	2 	3 	4 	5 	6 
 தலை முடியில் அணிதல்						
 பூமாலைகளில்						
 பூக்கோலங்களில்						
 அலங்காரங்களில்						
 எண்ணிக்கை						

அ. அதிகமான 🙂 பெற்ற பூ எது? _____.

குறைவான 🙂 பெற்ற பூ எது? _____.

ஆ. உங்கள் வீட்டில் அதிகமாகப் பயன்படுத்தப்படும் பூ எது? _____.

நம்மை அலங்கரிக்கவும் வீடுகளை அலங்கரிக்கவும், வழிபாட்டுத் தலங்களை அலங்கரிக்கவும் விழாக்காலங்களிலும் பூக்களைப் பயன்படுத்துகிறோம்.

3. உங்களுக்கு ஏன் பூக்கள் பிடிக்கும்? உங்கள் பதில்களுக்கு (✓) குறியிட்டு, நண்பர்களுடன் பகிர்க.



பூக்கள் வண்ணமயமானவை.



பூக்கள் நறுமணமிக்கவை.



வண்ணத்துப்பூச்சிகள் பூக்களை நோக்கி வருகின்றன.




பூக்கள் நம்மை மகிழ்ச்சியடையச் செய்கின்றன.



பூக்கள் சுற்றுப்புறத்தை அழகாக்குகின்றன.

4. பூக்குடுவையைப் பென்சில் துருவல்களைப் பயன்படுத்தி அலங்கரிக்க.







5. ஒரு சிறிய வீட்டையும் அதன் அருகில் ஒரு மரத்தையும் ஒரு குளத்தையும் வரைக. வீட்டைச் சுற்றி உங்களுக்குப் பிடித்த தாவரங்களையும் குளத்தில் பூக்களையும் வரைக.



கற்றல் பயணம்

VR3HL

1. ஒவ்வொரு தாவரமும் வளரும் இடத்துடன் அத்தாவரத்தைக் கோடிட்டு இணைக்க.

குளம் தோட்டம் வயல்





2. சிறிய தொட்டியில் வளர்ப்பதற்கேற்ற தாவரத்திற்கு (✓) செய்க.





3. பின்வருவனவற்றுள் எது மணமுள்ள மலர்? (✓) செய்க.





4. வாய்மொழி வினாக்கள்

அ) தண்டின் வழியாக நீர் மேலே ஏறா விட்டால், இலைகளுக்கு என்ன நிகழும்?


ஆ) எனது நண்பன் உலர்ந்த மணலில் ஒரு தாமரைச் செடியை நட்டான். அது நன்கு வளருமா? ஏன்?


நான் கற்றவை

- என்னால் தாவரங்கள் வளரும் இடங்களை அடையாளம் காண முடியும். ☆
- என்னால் தாவரத்தின் முக்கிய பாகங்களின் பெயர்களைக் கூற முடியும். ☆
- தாவரத்தின் எந்தப் பாகங்களை நாம் உண்கிறோம் என்பதை நான் அறிந்திருக்கிறேன். ☆
- என்னால் பொதுவான பூக்களையும் அவற்றின் பயன்களையும் அடையாளம் காண முடியும். ☆
- நான் தாவரங்களைப் பராமரிக்கிறேன். ☆

நானே செய்வேன்

1. நிலத்திற்குக் கீழே வளரும் காய்கறிகளுக்கு 🟤 நிறமும், நிலத்திற்கு மேலே வளரும் காய்கறிகளுக்கு 🟢 நிறமும் இடுக.







2. ஒரு தாவரத்திற்கு சூரிய ஒளியும் மண்ணும் கிடைக்கின்றன. ஆனால், நீர் கிடைப்பதில்லை. என்ன நிகழலாம்?

- ☐ தாவரம் நன்கு வளரும்
- ☐ தாவரம் உலர்ந்து விடும்.
- ☐ தாவரம் நிறைய மலர்களைத் தரும்.

3. படத்தை உற்றுநோக்கவும். தாவரத்திற்காக உணவைத் தயாரிக்கும் தாவரப் பாகத்தினை (✓) செய்யவும். அப்பாகத்தின் பெயரை எழுதவும்.



அப்பாகத்தின் பெயர்: _____

4. பழங்களாக மாறும் தாவரத்தின் பாகத்தினை (✓) செய்க.

அ) ○ 

ஆ) ○ 

இ) ○ 

ஈ) ○ 

5. கொடுக்கப்பட்டிருக்கும் காய்கறிகளைச் சரியான குழுவுடன் பொருத்தவும்.






இலைகள்

பூக்கள்

நிலத்துக்குக் கீழே வளர்பவை

நிலத்துக்கு மேலே வளர்பவை





6. வாய்மொழி வினாக்கள்

அ. ஒரு தாவரம் பல மலர்களைக் கொண்டுள்ளது. சில நாள்களுக்குப் பிறகு என்ன நிகழும்?

ஆ. "தாவரங்கள் தோட்டங்களில் மட்டுமே வளர்கின்றன" என்று உன் நண்பன் கூறுகிறான். நீ ஏற்றுக்கொள்கிறாயா? ஏன்? ஏன் இல்லை?

7. செயல்திட்டம்

உனது சுற்றுப்புறத்தில் உள்ள மலர்களை உற்றுநோக்கவும்.
நீ உற்றுநோக்கியவற்றைப் பெரியோரின் உதவியுடன் நிரப்பவும்.

வ. எண்	பூவின் பெயர்	நிறம்	இதழ்களின் எண்ணிக்கை	நறுமணம் உள்ளதா? இல்லையா?
1				
2				
3				
4				
5				

2 ஜீனியின் தோட்டம்
காய்கறிகள்

செயல்பாட்டு நேரம்

எனது காய்கறி மற்றும் பழத் தோட்டத்திற்கு உங்களை வரவேற்கிறேன். என்னைக் கண்டு பயப்படாதீர்கள். நான் உங்களின் நட்பான ஜீனி. வாருங்கள், நாம் சேர்ந்து பாடலாம்.





வாருங்கள், வாருங்கள், என்னோடு வாருங்கள்!
பாருங்கள், பாருங்கள், அழகு தோட்டம் பாருங்கள்!
மண்ணுக்குள்ளே உருளைக்கிழங்கு,
மறைந்திருக்கும் உருளைக்கிழங்கு
இலைஇலையாய் முட்டைக்கோஸ்,
உருண்டு திரண்ட முட்டைக்கோஸ்,
அடுக்கடுக்காய் வெங்காயம்!
அழ வைக்கும் வெங்காயம்!
சிவப்பு சிவப்பாய்த் தக்காளி
சாறு நிறைந்த தக்காளி!
உச்சி முதல் பாதம் வரை
ஊட்டம் தரும் நல் உணவே!

சேகரித்து வகைப்படுத்துவோம்

செயல்பாட்டு நேரம்

உங்களுக்குப் பிடித்தமான காய்கறியைக் கூறுங்கள். தோட்டத்தில் அதைக் கண்டுபிடித்து என்னிடம் கொண்டு வாருங்கள். அவற்றைக் காய்கறி விற்பவர் வைத்திருப்பதைப் போல வண்ணத்தின் அடிப்படையில் அடுக்குங்கள்.



மிக அருமை குழந்தைகளே! காய்கறி விற்பனையாளரின் வண்டியைப் போலவே இருக்கிறது.



ஆசிரியர் கையேடு

ஆசிரியர் ஜீனியாக நடிக்கவும். இச்செயல்பாட்டைச் செய்ய, குழந்தைகளை அவர்களின் வீட்டிலிருந்து ஏதேனும் ஒரு காய்கறியை எடுத்து வரச்சொல்லவும்.

கண்டுபிடி! கண்டுபிடி !



நான் உங்களிடம் சில புதிர்களைக் கேட்கிறேன். நீங்கள் அந்தப் புதிருக்குரிய காய்கறியைக் கண்டுபிடித்து என்னிடம் கொண்டு வாருங்கள்.

(தக்காளி, கேரட், வெங்காயம், கத்தரிக்காய், முட்டைக்கோஸ்)



நான் பளபளப்பாக ஊதா வண்ணத்தில் கிரீடத்துடன் இருப்பேன். நான் யார்?

_ _ _ _ _ _ _ _ _

நான் ஆரஞ்சு வண்ணத்தில் இருப்பேன். முயல்கள் என்னை விரும்பிச் சாப்பிடும். நான் யார்?

_ _ _ _ _ _ _ _ _ _

நான் இளஞ்சிவப்பு அல்லது வெள்ளை நிறத்தில் இருப்பேன். நீங்கள்என்னை நறுக்கும்போது அழுவீர்கள். நான் யார் ?

_ _ _ _ _ _ _ _ _ _

நான் பெரிய பந்து போலப் பச்சை நிறத்தில் இருப்பேன். இலைகளைப் பல அடுக்குகளாக அணிந்திருப்பேன். நான் யார்?

_ _ _ _ _ _ _ _ _ _

சிவப்பு நிறத்தில் சாறு நிறைந்தவன் நான். காய்கறிக்கலவைக்குச் சுவை சேர்ப்பேன், நான் யார்?

_ _ _ _ _ _ _ _ _

தொட்டுணர்ந்து வகைப்படுத்துவோம்

விளையாடலாம் வாங்க. நான் மென்மை, கடினம், வழுவழுப்பு, சொரசொரப்பு என நான்கு வட்டங்களை வரையப் போகிறேன். காய்கறிகளைத் தொட்டுணர்ந்து சரியான வட்டங்களில் வைக்கவும்.

PE2WN



செய்து கற்போம்


1. காய்களின் மேற்புறத் தன்மையைப் பார்த்துச் சரியானவைக்கு (✓) குறியிடுக




தக்காளி



சேனைக்கிழங்கு



பாகற்காய்




சுரைக்காய்

○ சொரசொரப்பு	○ சொரசொரப்பு மற்றும் கடினம்	○ சொரசொரப்பு	○ மென்மை
○ வழுவழுப்பு	○ மென்மை மற்றும் வழுவழுப்பு	○ வழுவழுப்பு	○ கடினம்

2. காய்கறிகளைப் பார்த்து, மிகக் கனமானதிலிருந்து மிக இலேசானது வரை எண் இடுக. மிகக் கனமானதற்கு 6 என்றும், மிக இலேசானதற்கு 1 என்றும் எண் இடுக.




3. காய்கறிகளைப் பார்த்து, நீளமானதிலிருந்து குட்டையானது வரை எண் இடுக. மிக நீளமானதற்கு 6 என்றும் மிகக் குட்டையானதற்கு 1 என்றும் எண் இடுக.



4. காய்கறிகளைப் பயன்படுத்தி வானவில்லை உருவாக்குக.

சிவப்பு ஆரஞ்சு மஞ்சள் பச்சை நீலம் கருநீலம் ஊதா


வானவில்லின் ஒவ்வொரு நிறத்திற்கும் ஒரு காய்கறியை என்னிடம் கொண்டு வாருங்கள். அவற்றை வரையவும். எந்த இரண்டு நிறங்களுக்கு உங்களால் காய்கறிகளைக் கண்டறிய முடியவில்லை?



செயல்பாட்டு நேரம்

காய்கறி மனிதன்

குழுவாக இணைந்து, காய்கறிகளைப் பயன்படுத்திக் காய்கறி மனிதனை உருவாக்குக.





உடற்தகுதியுடனும் ஆரோக்கியமாகவும் இருக்க அதிகக் காய்கறிகளை உண்ணுங்கள்.

"நீங்கள் மிகக் கடினமாகவும் புத்திசாலித்தனமாகவும் உழைத்துள்ளீர்கள். வாருங்கள்! நாம் காய்கறிக் கலவை செய்து சாப்பிடுவோம். இது ஓர் ஆரோக்கியமான சிற்றுண்டி." என்றார் ஜீனி.




ஆசிரியர் கையேடு

குழந்தைகளுடன் இணைந்து காய்கறிக் கலவையைத் தயாரிக்கவும்.

செய்து கற்போம்



1. பச்சையாக உண்ணக்கூடிய காய்கறிகளைக் கண்டுபிடித்து அவற்றை இணைத்து 'ப' வடிவத்தை உருவாக்குக.



2. பச்சையாக உண்ணக்கூடிய காய்கறிகளில் உங்களுக்குப் பிடித்தது எது?



_____

எனது தோட்டத்தில் உள்ள பலவகையான வெண்டைக்காய்களைப் பாருங்கள்.



3. வெவ்வேறு வகையான மிளகாய்களைக் கொண்டு வரவும். அவற்றை வரைந்து வண்ணமிடுக. (குடைமிளகாயைச் சேர்த்துக்கொள்ளலாம்)

சிவப்பு மிளகாய்	பச்சை மிளகாய்	பச்சை குடைமிளகாய்

ஆசிரியர் கையேடு

சிவப்பு மிளகாய்கள், பச்சை மிளகாய்கள் மற்றும் குடை மிளகாய்களைக் கொண்டு வரவும். ஒரே காய்களின் வெவ்வேறு வகைகளைக் குழந்தைகள் புரிந்து கொள்வதற்கு உதவவும்.

கீரைகள்



"இன்று நான் புதினாச் சட்னி சாப்பிட்டேன். சில இலைகளைச் சாப்பிடலாம் என்பது உங்களுக்குத் தெரியுமா? அவை நமது உணவைச் சுவையாக்குவதோடு, நம்மை ஆரோக்கியமாகவும் வைக்கின்றன. உங்களுக்கு எந்தக் கீரை அதிகம் பிடிக்கும்?"



மல்லித்தழை



முருங்கை இலை



புதினா



பசலைக்கீரை



கறிவேப்பிலை



பல்வேறு கீரைகளைக் கொண்டுவந்து, அவற்றின் பெயர்களை அறியக் குழந்தைகளுக்கு உதவவும்.



1. உங்களுக்குப் பிடித்த கீரையை வரைக.

2. வேறுபட்டதை வட்டமிடுக.

அ.











ஆ.










இ.









உங்களது பதில்களை நண்பர்களுடன் ஒப்பிட்டுக் கலந்துரையாடுக.



குழந்தைகள், தங்கள் தேர்வுகளுக்கான காரணத்தைப் புரிந்துகொள்ள உதவவும்.

பழங்கள்

செயல்பாட்டு நேரம்

தொடு, நுகர், கண்டுபிடி!



ஆசிரியர் கையேடு

குழந்தைகளின் கண்களை ஒரு துணியால் கட்டி, அவர்களுக்கு முன்பாகப் பழங்களை வைக்கவும். அவற்றைத் தொட்டும் முகர்ந்தும் பார்த்துக் கண்டுபிடிக்கச் சொல்லவும்.

BN1PK

செய்து கற்போம்

1. கீழே கொடுக்கப்பட்டுள்ள பழங்களின் நிறம், அளவு, மேற்புறத் தன்மையை உற்றுநோக்கி அட்டவணையை நிரப்புக.

பண்புகள்	 தர்பூசணி	 திராட்சை	 ஆப்பிள்	 பலாப்பழம்
நிறம் பச்சை / சிவப்பு / ஊதா				
அளவு பெரியது/ நடுத்தரம்/ சிறியது				
மேற்புறத் தன்மை கடினம்/ மென்மை				
சொரசொரப்பு / வழவழப்பு				



ஆசிரியர் கையேடு

எந்தெந்தப் பழங்களைத் தோலுடனும், தோலில்லாமலும் விதைகளுடனும் சாப்பிடலாம் என்பதையும் எவை சுளைகளாகப் பிரிக்கப்பட்டவை என்பதையும் புரிந்துகொள்ளக் குழந்தைகளுக்கு உதவவும்.

2. வினாவிற்கான விடைகளை எண்களில் எழுதுக.



ஆரஞ்சு (1)



மாம்பழம் (2)



சப்போட்டா (3)



வாழைப்பழம் (4)



ஆப்பிள் (5)



திராட்சை (6)



கொய்யாப்பழம் (7)



பலாப்பழம் (8)


தோலை உரித்து உண்ணக்கூடிய பழங்கள் எவை? ( ) ( ) ( ) ( )

தோலுடன் உண்ணக்கூடிய பழங்கள் எவை? ( ) ( ) ( ) ( ) ( )

சுளைகளாகப் பிரிந்திருக்கும் பழங்கள் எவை? ( ) ( )

விதைகளுடன் உண்ணக்கூடிய பழங்கள் எவை? ( ) ( ) ( ) ( )

3. பழங்களை அவற்றின் சுவையின் அடிப்படையில் உரிய இடங்களில் வரைக.



இனிப்பு	இனிப்பு மற்றும் புளிப்பு	புளிப்பு

ஆசிரியர் கைபேடு

உள்ளூரில் கிடைக்கும் பழங்களைக் கொண்டு வரவும். அவற்றைக் குழந்தைகளைச் சுவைக்கச் செய்து, சுவையின் அடிப்படையில் வகைப்படுத்தச் சொல்லவும்.

பருவகாலப் பழங்கள்

உற்றுநோக்கிக் கலந்துரையாடுவோம்

நாம் சில பழங்களை ஆண்டின் குறிப்பிட்ட காலங்களில் மட்டுமே பார்க்கிறோம். ஏன்?











செய்து கற்போம்

1. ஜீனி கூறியபடி, வெப்பமான மாதங்களில் கிடைக்கும் பழங்களுக்கு மட்டும் வண்ணம் தீட்டுக.




2. வெப்பமான மாதங்களில் கிடைப்பவைக்கு (வெ) என்றும் குளிர் மாதங்களில் கிடைப்பவைக்கு (கு) என்றும் அனைத்து பருவ காலங்களிலும் கிடைப்பவைக்கு (அ) என்றும் எழுதுக.



பழம் ஒன்று – வகை பல

உற்றுநோக்கிக் கலந்துரையாடுவோம்

சில பழங்கள் பல வகைகளைக் கொண்டவை.





ஏலக்கி

கற்பூரவாழை

செவ்வாழை

நேந்திரம்

பங்கனபள்ளி


செந்தூரம்

மல்கோவா

கிளிமூக்கு

உங்கள் பகுதியில் எந்த வகையான வாழைப்பழங்களும் மாம்பழங்களும் கிடைக்கின்றன?


செய்து கற்போம்




கற்பூரவாழை



நேந்திரம்



செவ்வாழை



ஏலக்கி

வரைந்து வண்ணமிடுக.

1. நீளமான வாழைப்பழம்

2. மிகச்சிறிய வாழைப்பழம்

3. சிவப்பு நிறமுடைய வாழைப்பழம்

1

2

3

UO9XU


2. சொல் வங்கியில் கொடுக்கப்பட்டுள்ள சொற்களைப் பயன்படுத்தி, மாம்பழங்களின் நிறம், அளவை உற்றுநோக்கி, ஒப்பிட்டு எழுதுக.

சொல் வங்கி நிறம்: சிவப்பு, பச்சை, மஞ்சள் அளவு: பெரியது, சிறியது

தன்மை	 மல்கோவா	 செந்தூரம்	 பங்கனபள்ளி
நிறம்			
அளவு			

3. சந்தைக்கு வரும் பருவகாலப் பழங்களை அடையாளம் காண்க.

4. செயல் திட்டம்: உங்கள் பெற்றோருடன் சந்தைக்குச் செல்லவும். நீங்கள் வாங்கிய பழங்கள், காய்கறிகளின் பெயர்களைக் கூறி அவற்றை வகுப்பில் பகிர்ந்துகொள்க.



ஆசிரியர் கையேடு

காய்கறிகள், பழங்களின் பெயர்களைக் கரும்பலகையில் எழுதவும்.





உங்களுக்குப் பிடித்த காய்கறிகள், பழங்களின் படங்களைப் பையில் வரைக.



காய்கறிகள்

பழங்கள்





கற்றல் பயணம்

1. பல அடுக்குகளைக் கொண்ட காய்கறியை (✓) செய்க.

அ. 
ஆ. 
இ. 
ஈ. 

2. சிவப்பு மற்றும் சாறு நிறைந்த காய்கறிக்கு மட்டும் புள்ளிகளை இணைத்து வண்ணம் தீட்டுக.

அ. 
ஆ. 
இ. 
ஈ. 

3. காய்கறிக் கலவையில் பயன்படுத்தப்படும் காய்கறியை (✓) செய்க.

அ. 
ஆ. 
இ. 
ஈ. 

4. மற்றொரு வகை வெண்டைக்காய்க்கு வண்ணமிடுக.





5. குறிப்பிற்கேற்ற பழத்தினைக் கண்டுபிடித்து வரைக.

இதன் நிறம் மஞ்சள். சற்று பெரியது.
இனிப்புச் சுவை உடையது.
தொடுவதற்கு மென்மையாக இருக்கும்.



நான் கற்றவை

- என்னால் காய்கறிகள், கீரைகள், பழங்களை அடையாளம் காண முடியும்.
- என்னால் காய்கறிகள் மற்றும் பழங்களை அவற்றின் நிறம், வடிவம், அளவைக் கொண்டு ஒப்பிட முடியும்.
- என்னால் காய்கறிகளையும் பழங்களையும் வகைப்படுத்த முடியும்.
- என்னால் பச்சையாகவோ அல்லது சமைத்தோ உண்ணக்கூடிய பழங்கள் மற்றும் காய்கறிகளை அடையாளம் காண முடியும்.
- நான் ஆரோக்கியமான, தூய்மையான உணவுப் பழக்கவழக்கங்களைப் பின்பற்றுகிறேன்.

நானே செய்வேன்

1. விடுகதைகளுக்கு விடையளி. (தக்காளி, வெங்காயம்)

அ. என்னை வெட்டும் போது நீங்கள் அழுவீர்கள். நான் யார்? _____

ஆ. சிவப்பானவன்; சாறு நிறைந்தவன். நான் யார்? _____

2. பொருத்தமான வட்டத்தில் வண்ணமிடுக.

அ.  ◯ சொரசொரப்பு ◯ வழவழப்பு

ஆ.  ◯ சொரசொரப்பு ◯ வழவழப்பு

இ.  ◯ சொரசொரப்பு ◯ மென்மை மற்றும் வழவழப்பு


3. பழங்களை அவற்றின் சுவைகளுடன் பொருத்துக.

அ.  – இனிப்பு மற்றும் புளிப்பு

ஆ.  – புளிப்பு

இ.  – இனிப்பு

4. படத்தைப் பயன்படுத்தி (✓) செய்க.



அ. நிறம்

◯ பச்சை ◯ சிவப்பு ◯ ஊதா

ஆ. அளவு

◯ பெரியது ◯ நடுத்தரம் ◯ சிறியது

இ. மேற்புற அமைப்பு

◯ கடினம் ◯ மென்மை ◯ சொரசொரப்பு ◯ வழவழப்பு

நான் ஒரு _____

5. படங்களைச் சரியாக வரிசைப்படுத்தி 1, 2, 3 மற்றும் 4 என எழுதுக.



6. வாய்மொழி வினாக்கள்

அ. ஏதேனும் இரண்டு இனிப்பான பழங்களின் பெயர்களைக் கூறுக.

ஆ. ஏதேனும் மூன்று சிறிய காய்கறிகளின் பெயர்களைக் கூறுக.

இ. பச்சையாக உண்ணும் இரண்டு காய்கறிகளின் பெயர்களைக் கூறுக.


ஈ. நீங்கள் உண்ணும் ஏதேனும் ஒரு கீரையின் பெயரைக் கூறுக.

7. செயல் திட்டம்: உங்கள் நண்பர்கள் அல்லது குடும்ப உறுப்பினர்கள் மூவரிடம், அவர்களுக்குப் பிடித்த காய்கறி, பழம் எது என்று கேட்டு, அவற்றை வரைக.

வ.எண்			
காய்கறி			
பழம்			

திறம்பட இயங்கு! தெளிவாகச் சிந்தி!

குழந்தைகளின் கவனக் குவிப்பிற்கும் ஒருங்கிணைப்பிற்கும் வாரத்திற்கு ஒரு பயிற்சி வீதம் நாள்தோறும் ஐந்து நிமிடங்கள் செய்ய வைக்க வேண்டும்.



இரு கைகளையும் ஒரே நேரத்தில் இயக்கவும்–இடது கையை மேலே உயர்த்தி 'M' வடிவத்தையும், வலது கையை கீழே இறக்கி 'W' வடிவத்தையும் உருவாக்கவும்.





வலது கை: உங்கள் ஆள்காட்டி விரலின் நுனியால் வட்டத்தின் மீது, இடைவிடாமல் கடிகார முள் சுழலும் திசையில் வட்டமிடவும்.
இடது கை: உங்கள் உள்ளங்கையின் கீழ் முனையை, கோட்டின் வழியே மேலிருந்து கீழாக செங்குத்தாக நகர்த்தவும். பிறகு கைகளை மாற்றிச் செய்யவும்.







வலது கை: உங்கள் ஆள்காட்டி விரலால் வட்டத்தை இடைவிடாமல் வரையவும். முழு நேரமும் அதைச் சீராக நகர்த்திக்கொண்டே இருக்கவும்!

படி 1: இடது கையை மூடிக்கொண்டு பச்சை நிறப் புள்ளியைத் தொடவும்.

படி 2: உங்கள் இடது உள்ளங்கை கீழ் விளிம்பை ஆரஞ்சு நிறப் பட்டையின் மீது அழுத்தவும்.

படி 3: உங்கள் இடது உள்ளங்கையை ஊதா நிறக் கை வடிவத்தின் மீது பொருத்தவும்.




இரு கைகளையும் தயாராக வைத்துக்கொண்டு கரும்பலகையின் முன் நிற்கவும். இரு கைகளையும் ஒரே நேரத்தில் பயன்படுத்தி, கரும்பலகையில் ஒவ்வொரு வரிசையாக நகரவும்.
திறந்த கை வடிவம்: உங்கள் திறந்த உள்ளங்கையைக் கரும்பலகையின் மீது பொருத்தவும். வட்ட வடிவம்: மூடிய கையால் கரும்பலகையைத் தொடவும்.




அமைப்புகளை நிறைவு செய்வோம்


கொடுக்கப்பட்ட வண்ண அமைப்பைப் பயன்படுத்திப் படங்களுக்கு வண்ணம் தீட்டவும்.























அமைப்புகளை நிறைவு செய்வோம்


























கற்றல் பயணம்



பருவகாலப் பழங்கள் மற்றும் பொதுவான பழங்கள், காய்கறிகளின் பல்வேறு வகைகளை அறிதல்.

புத்தம்புதுப் பழங்கள், காய்கறிகளை உண்பதன் முக்கியத்துவத்தை உணர்வதோடு, உணவு சார்ந்த எளிய சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுதல்.

உற்றுநோக்கக்கூடிய பண்புகளின் அடிப்படையில் பொதுவான காய்கறிகள், கீரைகள் மற்றும் பழங்களை அடையாளம் கண்டு வகைப்படுத்துதல்.

உற்றுநோக்கக்கூடிய பண்புகள், பயன்பாட்டின் அடிப்படையில் பொதுவான மலர்களை அடையாளம் காணுதல்.

தாவரங்களை அடையாளம் கண்டு ஒப்பிட்டுப் பார்ப்பதுடன், தாவரங்களின் பல்வேறு பாகங்களிலிருந்து நமக்கு உணவு கிடைக்கிறது என்பதையும் உணர்தல்.

தாவரங்கள் வளரும் இடங்கள், அவற்றின் பாகங்கள், பணிகளை அடையாளம் காண்பதுடன், தாவரங்களைப் பராமரிப்பதில் அக்கறையுடனும் பொறுப்புடனும் செயல்படுதல்.

முதல் வகுப்பு – கணக்கு – இரண்டாம் பருவம்

பாடநூல் உருவாக்கக் குழு

பாட வல்லுநர்

முனைவர் இரா. இராமானுஜம்,
முன்னாள் பேராசிரியர்,
கணித அறிவியல் நிறுவனம் (IMSc), சென்னை.

மேலாய்வாளர்கள்

திருமதி. கி. கிருத்திகா,
அசிம் பிரேம்ஜி பல்கலைக்கழகம், பெங்களூரு.

முனைவர் தெ. காசி,
முதுநிலை விரிவுரையாளர்,
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
பாலையம்பட்டி, விருதுநகர் மாவட்டம்.

நூலாசிரியர்கள்

திருமதி. பா. தமிழ்ச்செல்வி,
பாட ஒருங்கிணைப்பாளர், துணை இயக்குநர்,
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி
நிறுவனம், சென்னை.

நா. வி. பூர்ணிமா தேவி,
பட்டதாரி ஆசிரியை,
அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி, திருப்பெரும்புதூர்,
காஞ்சிபுரம் மாவட்டம்.

ரா. ரஜனி,
பட்டதாரி ஆசிரியை,
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, பாப்பான்குளம்,
மானாமதுரை, சிவகங்கை மாவட்டம்.

பி. ரேவதி,
இடைநிலை ஆசிரியை,
வடசென்னை நடுநிலைப் பள்ளி, பழைய
வண்ணாரப்பேட்டை, சென்னை மாவட்டம்.

சே. ஸ்வீட்லின் ஹில்டா ஜான்ஸிராணி,
இடைநிலை ஆசிரியை,
நேரு வித்தியாசாலை ஆரம்பப் பள்ளி, நரிமேடு,
மதுரை மாவட்டம்.

ஜெ. ரமணி,
இடைநிலை ஆசிரியை,
கோமதி நடுநிலைப்பள்ளி, அனுப்பானடி,
மதுரை மாவட்டம்.

ல.ராதா,
இடைநிலை ஆசிரியை,
ஊ.ஒ.தொ.பள்ளி, மணவாளநகர்,
கடம்பத்தூர் ஒன்றியம், திருவள்ளூர் மாவட்டம்.

மெய்ப்புத் திருத்துநர்

சோ. விஜயராகவன்,
விரிவுரையாளர்,
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
திருவல்லிக்கேணி, சென்னை மாவட்டம்.

மின்னுரு பாடப்பொருள் உருவாக்கக் குழு

பா. மேக்டலின் பிரேமலதா,
மின்னுரு பாடப்பொருள் ஒருங்கிணைப்பாளர்,
பட்டதாரி ஆசிரியர், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும்
பயிற்சி நிறுவனம், சென்னை மாவட்டம்.

ம. ஆனி ஃப்ரீ டா,
முதுகலை ஆசிரியர்,
எஸ் எல் பி அரசு மேல்நிலைப்பள்ளி, நாகர்கோவில்,
கன்னியாகுமரி மாவட்டம்

சு. கோபாலகிருஷ்ணன்,
பட்டதாரி ஆசிரியர், அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி,
குன்னம், பெரம்பலூர் மாவட்டம்.

த. சிவமலர்மன்னன்,
இடைநிலை ஆசிரியர், ஊராட்சி ஒன்றியத்
தொடக்கப்பள்ளி, கொக்கரக்கல் வலசு,
தொப்பம்பட்டி ஒன்றியம், திண்டுக்கல் மாவட்டம்

கலை மற்றும் வடிவமைப்புக் குழு

ம. அமல்ராஜ்
வடிவமைப்பு ஒருங்கிணைப்பாளர், பட்டதாரி ஆசிரியர்,
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி
நிறுவனம், சென்னை.

சி. பிரசாந்த், வடிவமைப்பாளர்
ச. அசோக் குமார், வடிவமைப்பாளர்

வரைபடம்

இரா. இராஜேஷ்
பா. பிரமோத்

அட்டை வடிவமைப்பு

கதிர் ஆறுமுகம்

முதல் வகுப்பு – சூழ்நிலையியல் – இரண்டாம் பருவம்

பாடநூல் உருவாக்கக் குழு

பாட வல்லுநர்கள்

மருத்துவர். சுசித்ரா ராம்குமார்,
உபாசனா கற்றல் மற்றும் நலவாழ்வு மையம்,
அடையாறு, சென்னை.

முனைவர். சீ. பிரபு,
துணை இயக்குநர் (பாடத்திட்டம்),
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்,
சென்னை.

மேலாய்வாளர்கள்

ஜெ. இராதாமணி, விரிவுரையாளர்,
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
களியாம்பூண்டி, காஞ்சிபுரம் மாவட்டம்.

ரா. சரண்யா, விரிவுரையாளர்,
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
திருவூர், திருவள்ளூர் மாவட்டம்.

நூலாசிரியர்கள்

முனைவர். நா. வளர்மதி, முதல்வர்,
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
களியாம்பூண்டி, காஞ்சிபுரம் மாவட்டம்.

சு. அரும்புமொழி, முதுநிலை விரிவுரையாளர்,
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
இராணிப்பேட்டை, வேலூர்.

நா. ரெ. மகாலிங்கம், விரிவுரையாளர்,
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
பாலையம்பட்டி, விருதுநகர் மாவட்டம்.

தெ. அசோக், முதுகலை ஆசிரியர்,
அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி,
மீஞ்சூர் ஒன்றியம், பொன்னேரி,
திருவள்ளூர் மாவட்டம்.

மு. தாமரைச்செல்வி, பட்டதாரி ஆசிரியர்,
ஊ. ஒ. ந. பள்ளி, மைக்குடி,
திருமங்கலம் ஒன்றியம், மதுரை மாவட்டம்.

கி. அமுதா செல்வி, பட்டதாரி ஆசிரியர்,
அரசு மேல்நிலைப் பள்ளி, குலமங்கலம்,
மதுரை மேற்கு ஒன்றியம், மதுரை மாவட்டம்.

கா. ஜெயபாபு, இடைநிலை ஆசிரியர்,
ஊ. ஒ. தொ. பள்ளி, சிட்டுலொட்டி,
தே.கல்லுப்பட்டி ஒன்றியம், மதுரை மாவட்டம்.

அ. ஜூலியட் விண்ணரசி, இடைநிலை ஆசிரியர்,
ஊ. ஒ. தொ. பள்ளி, கூனிமேடுகுப்பம்,
மரக்காணம் ஒன்றியம், விழுப்புரம் மாவட்டம்.

ச. ஜெயகணேஷ், இடைநிலை ஆசிரியர்,
ஊ. ஒ. தொ. பள்ளி, எரிசனம்பட்டி,
உடுமலைப்பேட்டை ஒன்றியம், திருப்பூர் மாவட்டம்.

மெய்ப்புத்திருத்துநர்

கா. கோமதி, விரிவுரையாளர்,
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
திருவூர், திருவள்ளூர் மாவட்டம்.

மின் பாடப்பொருள் உருவாக்கக்குழு

பா. மேக்டலின் பிரேமலதா, பட்டதாரி ஆசிரியர்,
ஒருங்கிணைப்பாளர், (மின் பாடப்பொருள் குழு),
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி
நிறுவனம், சென்னை.

ப. பாலாஜி, முதுகலை ஆசிரியர் (வேதியியல்),
அரசு மேல்நிலைப்பள்ளி, வடக்கு சித்தாம்பூர்,
திருச்சிராப்பள்ளி

இரா. கோபிநாத், இடைநிலை ஆசிரியர்,
ஊ. ஒ. ந. பள்ளி, இராஜாகுப்பம் குடியாத்தம்,
வேலூர் மாவட்டம்.

வரைகலை மற்றும் வடிவமைப்புக்குழு

ம. அமல்ராஜ்
வடிவமைப்பு ஒருங்கிணைப்பாளர்,
பட்டதாரி ஆசிரியர், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி
மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை.

கி. ஜெரால்டு வில்சன், வடிவமைப்பாளர்

ம. இயேசு ரெத்தினம், வடிவமைப்பாளர்

வரைபடம்

ம. குருமணி, ஓவிய ஆசிரியர்,
அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளி,
MMDA காலனி அரும்பாக்கம், சென்னை.

இரா. இராஜேஷ்

அட்டைப்படம்

கதிர் ஆறுமுகம்

இந்நூல் 80 ஜி.எஸ்.எம் எலிகண்ட்
மேப்லித்தோ தாளில் அச்சிடப்பட்டுள்ளது
ஆப்செட் முறையில் அச்சிட்டோர்: